www.Padasalai.Net www.CBSEtips.in

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022

-----

வகுப்பு 11

நேரம்: 3.00 மணி **வணிகவியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - I

குறிப்பு: 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20×1=20

2. கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) அர்த்தசாத்திரம் என்ற புத்தகம் யாரால் எழுதப்பட்டது?
அ) கௌடில்யர் ஆ) வால்மிகி இ) திருவள்ளுவர் ஈ) இளங்கோவடிகள்

2) மருத்துவர் தொழில் என்பது ..............
அ) வேலைவாய்ப்பு ஆ) தொழில் இ) சிறப்புத்தொழில் ஈ) தனியார் வணிகம்

3) அதிக அளவில் அபாயத்தைக் கொண்டது
அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம் இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்

4) இந்து கூட்டுக்குடும்பத் தொழிலில் உறுப்பினர்களை எவ்வாறு அழைப்பாய்?
அ) கர்த்தா ஆ) கூட்டுவாரிசுதாரர் இ) தலைமுறை ஈ) கூட்டாளிகள்

5) நிறுமச் சட்டத்தின் அட்டவணை - அ (Table A) என்பது
அ) நிகழ்ச்சி குறிப்பேட்டின் மாதிரி
ஆ) இருப்புநிலைக்குறிப்பின் மாதிரிப் படிவம்
இ) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி
ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

6) ராக்டேல் சொசைட்டி தோற்றுவித்தவர்
அ) ராபர்ட் ஓவென் ஆ) H.C. கால்வெர்ட் இ) டால்மாக்கி ஈ) லம்போர்ட்

7) கோகோ கோலா நிறுவனத்தை எதற்கு உதாரணமாய் கூறலாம்?
அ) பன்னாட்டு நிறுமம் ஆ) அரசு நிறுமம்
இ) இணை நிறுமம் ஈ) பொதுத்துறை நிறுமம்

8) அரசு நிறுமத்தின் பங்கு முதலீடு ............க்கு குறையாமல் அரசு பெற்றிருக்க வேண்டும்.
அ) 75% ஆ) 60% இ) 95% ஈ) 51%

9) ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் உள்ளது?
அ) மைய வங்கி ஆ) வணிக வங்கி
இ) கூட்டுறவு வங்கிகள் ஈ) வெளிநாட்டு வங்கிகள்

10) RTGs மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?
அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும்
ஆ) 50,000 இ) 2 லட்சம் ஈ) 5 லட்சம்

11) பண்டகக் காப்பகம் ............... தடையை நீக்குகிறது.
அ) ஆள்சார் ஆ) காலத்தடை இ) இடர்பாட்டு தடை ஈ) அறிவுத்தடை

12) GSTயின் விரிவாக்கம்
அ) சரக்கு மற்றும் அளிப்பு வரி ஆ) அரசு விற்பனை வரி
இ) சரக்கு மற்றும் சேவை வரி ஈ) பொது விற்பனை வரி

13) வருமான வரி என்பது
அ) வியாபார வரி ஆ) நேரடி வரி இ) மறைமுக வரி ஈ) சேவை வரி

14) இளவருடன் செய்யும் ஒப்பந்தம்
அ) செல்தகு ஒப்பந்தம் ஆ) செல்லாத ஒப்பந்தம்
இ) தவிர்தகு ஒப்பந்தம் ஈ) மற்றோரு தரப்பினரின் விருப்பத்தின் பெயரில்

15) உலக வர்த்தக அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம்
அ) நியூயார்க் ஆ) இலண்டன் இ) ஜெனிவா ஈ) பிரேசில்

16) நாடுகளுக்கிடையே சரக்குகள் மற்றும் சேவைகள் மட்டும் பரிமாறிக் கொள்ளப்பட்டால் அது ............... எனப்படும்.
அ) பன்னாட்டு வியாபாரம் ஆ) பன்னாட்டு வணிகம்
இ) மறுஏற்றுமதி வியாபாரம் ஈ) உள்நாட்டு வியாபாரம்

17) நிரந்தர இடமின்றி வெவ்வேறு இடங்களுக்கு சென்று குறைந்த விலையுள்ள பொருட்களை வியாபாரம் செய்வோரை ............... என்பர்.
அ) மடங்கு கடைகள் ஆ) முகவர்கள்
ஈ) சுற்றாடும் வியாபாரிகள்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



18) வியாபார இடைநிலையர்களை .............. வகைகளாகப் பிரிக்கலாம்.
அ) மூன்று ஆ) இரண்டு இ) ஐந்து ஈ) நான்கு

19) எந்த அமைப்பில் ஒருவரே உரிமையாளர், நிறுவனர் மற்றும் மேலாளர் என்ற வகையில் இருப்பர்?
அ) கூட்டுறவு சங்கம் ஆ) கூட்டு நிறுவனம்
இ) தனியாள் வணிகம் ஈ) அரசு நிறுவனம்

20) நேர்மைப் பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின் ..............
அ) கடனாளிகள் ஆ) கடனீந்தோர் இ) பணியாளர்கள் ஈ) உரிமையாளர்கள்

## பகுதி - II

குறிப்பு: **எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7×2=14

21) பண்டமாற்று முறை என்றால் என்ன?
22) வணிகத்தை வரையறு.
23) உறங்கும் கூட்டாளி என்பவர் யார்?
24) பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
25) இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
26) துறைவாரி அமைப்புகளுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.
27) வெளிநாட்டு வங்கிகள் என்றால் என்ன?
28) ATM பற்றி நீவிர் அறிவது யாது?
29) மறுஏற்றுமதி வியாபாரம் என்றால் என்ன?
30) சுரேஷ் சொந்தமாக ஒரு தொழில் தொடங்குகிறார். அவருடைய தந்தையும், சகோதாரும் அவருக்கு உதவியாக உள்ளனர். இது எவ்வகை வியாபார அமைப்பு எனக் கூறி அதனைப் பற்றி குறிப்பு வரைக.

## பகுதி - III

குறிப்பு: **எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 7×3=21

31) சேவைத் தொழில்கள் என்றால் என்ன?
32) வரையறாப் பொறுப்பு என்றால் என்ன?
33) கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
34) அரசு நிறுமம் என்றால் என்ன?
35) தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் (NEFT) விளக்குக.
36) கப்பல் இரசீது என்றால் என்ன?
37) பயிர் காப்பீட்டின் பொருள் தருக.
38) எந்தெந்த வழக்குகளில் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிக்கலாம்?
39) ஒப்பந்தத்தை யார் நிறைவேற்றலாம்?
40) நபர் என்ற சொல்லில் யாரெல்லாம் அடங்குவர்?

## பகுதி - IV

குறிப்பு: **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7×5=35

41) அ) வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக. **(அல்லது)**
ஆ) வருமான வரியின் ஐந்து சிறப்பு கூறுகளை விளக்கி எழுதுக.

42) அ) தொழிலின் நோக்கங்களை விவரி. **(அல்லது)**
ஆ) இழப்பீடு என்றால் என்ன? பல்வேறு வகையான இழப்பீடு யாவை?

43) அ) கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் யாவை? (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) நேரடி வரியையும் மறைமுக வரியையும் வேறுபடுத்துக. (ஏதேனும் 5)

44) அ) காப்பீட்டின் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் (ஏதேனும் 5) எழுதுக.

45) அ) அமைப்பு முறையேட்டின் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

46) அ) தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை? **(அல்லது)**
ஆ) கூட்டாண்மை கலைப்பின் வகைகளை விவரி. (ஏதேனும் 5)

47) அ) உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை? (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) கப்பல் இரசீதிற்கும் கப்பல் வாடகை முறிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com